# தொடக்கநிலை 1
# 2019

# தமிழ்மொழிப் பாடக் கலைத் திட்டத்தின் நோக்கங்கள்

* ஒவ்வொரு பிள்ளையும் தாய்மொழியை விரும்பிக் கற்றுப் பயன்படுத்தி அதனை வாழும் மொழியாக்க உதவ வேண்டும்.

* இயல்பான பல்வேறு வாழ்க்கைச் சூழல்களில் மொழியைத் திறம்படப் பயன்படுத்திப் பன்முனைப்புடன் கருத்துப் பரிமாறிக் கொள்பவர்களாகவும் உருவாக வேண்டும்.

# கேட்டலும் பேசுதலும்

- கேட்டலும் பேசுதலும் மொழி கற்றலுக்கு அடிப்படை
- இவற்றை வளர்க்க உற்சாகமூட்டும் நடவடிக்கைகளும் தொழில் நுட்பமும் செம்மையாகப் பயன்படுத்தப்படும்.

# பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றம்

- பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனை வளர்க்க வாய்ப்புகள் பல வழங்கப்படும்.

# படித்தல்

- தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேசவும் எழுதவும், சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும் படித்தல் திறன் அவசியம்.

# எழுதுதல்

- முதலில் எழுத்துகளின் வரிவடிவங்களை முறையாக எழுதக் கற்றுக்கொள்வர்.
- தொடர்ந்து சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை எழுதப் பயிற்சி பெறுவர்.
- படிப்படியாகத் தங்கள் எண்ணங்களுக்கு எழுத்துவடிவம் கொடுக்கக் கற்றுக்கொள்வர்.

# தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள்

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயன்பாடு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தும்.

# 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களும் விழுமியங்களும்

- பெரிய புத்தகங்கள், சிறுவர் கதைநூல்கள், படக்கதைகள் ஆகியவற்றின்வழி விழுமியங்களும் இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களும் வளர்க்கப்படும்.

# மின்னட்டைகளும் படஅட்டைகளும்

- துடிப்புமிக்க கற்றல் சூழலை உருவாக்கவும் கருத்துப் பரிமாற்றத்தில் பிள்ளைகள் ஈடுபடவும் பட அட்டைகள், மின்னட்டைகள் முதலிய வளங்களும் பயன்படுத்தப்படும்.

# ஆர்வமூட்டும் மொழிவள நடவடிக்கைகள்

# ஆர்வமூட்டும் மொழிவள நடவடிக்கைகள்

- கற்றலிப் ஆர்வத்தைத் தூண்டப் பல்வேறு ஆர்வமூட்டும் கற்பித்தல் உத்திகள் பயன்படுத்தப்படும்; பிள்ளைகள் பல மொழிவள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

# அன்றாடச் சூழலில் மொழி கற்றல்

- அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைச் செம்மையாகப் பயன்படுத்த ஊக்கமூட்டும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- பெற்றோர்களையும் பிள்ளைகளின் கற்றலில் ஈடுபடுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

# பெற்றோர்களின் கவனத்திற்கு

- உங்கள் குழந்தைகள் பள்ளியில் என்ன கற்கிறார்கள் என்பதில் ஆர்வம் காட்டுங்கள். அவர்களுடன் அதைப் பற்றி உரையாடுங்கள் இது உங்கள் குடும்பப் பிணைப்பை வலுப்படுத்த உதவும்.
  - நூலகத்துக்கு அழைத்துச் சென்று தமிழ் புத்தகங்கள் வாசித்துக் காட்டலாம்.
  - தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பார்த்து மகிழலாம், விளம்பரங்கள் சொல்லும் கருத்துகளை அவர்களுக்கு எடுத்துக் கூறலாம்.
  - பிள்ளைகளுடன் வெளியே செல்லும் போது சுற்றுப்புறத்தில் இருக்கும் பொருட்களைப் பற்றிப் பேச முயலலாம்.